Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 129/2014**

வழக்கு சாட்சி எண். PW27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.செல்வராஜ் | கிராமம் | : | கிருஷ்ணகிரி |
| தந்தை பெயர் | : | ராஜவேலு | தாலுக்கா | : | கிருஷ்ணகிரி |
| வயது | : | 50 | மாவட்டம் | : | கிருஷ்ணகிரி |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14**th** Day of **July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை மற்றும் கல்லூரியில் இணை பேராசியராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 01.09.2011ம் தேதியன்று அரூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை சுமார் 6 மணியளவில் ஆண்டியூர் அருகே ஈச்சர் வாகனம் கவிழந்து விபத்துக்குள்ளானாதா காயமுற்ற நபர்கள் பலர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார்கள் அதில் நான் கீழ் கண்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களுக்கு காயச்சான்று வழக்கினேன்.

(1) வெங்கடேசன் த/பெ சின்னையன் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்தததில் (1) 5x1x1/2 cm அளவிலான வலது நெற்றியில் கிழிந்த காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்த போது அவர் மருத்துவர் அறிவுறுத்தலை மீறி சிகிச்சையில் இருந்து சென்று விட்டார். அதனால் காயச்சான்றிதழ் வழங்க இயலவில்லை. மேற்படி காயத்தின் தன்மையை பொருத்து மட்டும் பார்க்கையில் அது சாதரணமான காயமாக தான் இருக்க வாய்ப்புள்ளது.

**(2)** காந்தியம்மாள் க/பெ குமார், காயங்கள் (1) சிறாய்ப்பு காயங்கள்8x5 cm வலது தோள்பட்டையில் காணப்பட்டது, அவரை உள்நோயாளியாக அனுமதித்த போது அவர் மருத்துவர் அறிவுறுத்தலை மீறி சிகிச்சையில் இருந்து சென்று விட்டார். அதனால் காயச்சான்றிதழ் வழங்க இயலவில்லை. மேற்படி காயத்தின் தன்மையை பொருத்து மட்டும் பார்க்கையில் அது சாதரணமான காயமாக தான் இருக்க வாய்ப்புள்ளது.

கடந்த 02.09.2011 தேதியன்று காலை 8.30 மணியளவில் அரூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் தங்கவேல், சந்தோஷம், பாக்கியலட்சுமி ஆகியோரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். **தங்கவேல் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ17 ஆகவும், சந்தோஷம் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ18 ஆகவும், பாக்கியலட்சுமி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ19 ஆகவும், குறியீடுசெய்யப்படுகிறது.** வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.

நீதித்துறை நடுவர் அரூர்.